**பலங்கொட பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பலங்கொட பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் பலங்கொட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்இவ்வறிக்கையில் 1.6.1 (இ) மற்றும் (உ) பந்தியில் குறிப்பிடப்படும் அவதானிப்பு தவிர்ந்த கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத் தொகை ரூபா 317,303,436 ஆன 43 ஜர்னல் குறிப்புகளுக்காக ஜர்னல் வவுசர்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஜர்னல் வவுசர் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | ஜர்னல் குறிப்புகளுக்காக ஜர்னல் வவுசர் தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 245,000 ஆன 03 ரூட் 20 பர்சஸ் ஆன 03 காணிகளை மூலதனமாக்காததனால் மீளாய்வாண்டு இறுதியில் காணி மற்றும் கட்டிட மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கு மீதி அப் பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பததாக. | சபைக்கு சொந்தமான ஆதனங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 994,250 ஆன இறக்கக் குழாய் இருப்பு இயந்திர மற்றும் உபகரண கணக்கு ஊடாக மூலதனமாக்கப்பட்டு இருந்ததால் இயந்திர மற்றும் | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நடைமுறையல்லாத சொத்துக்கள் சுவீகரிப்பு மற்றும் மேம்படுத்தலிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் மாத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் கணக்கில் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கு வருமானத்திளிலிருந்து பங்களிக்கும் கணக்கு மீதி அப் பெறுமதியிளால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | | மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு எஞ்சிய பெறுமதி ரூபா 1,007,550 ஆன இறக்கக் குழாய் இருப்பு மீதியை இனங்காணாததன் காரணத்தால் அப் பெறுமதியால் இருப்பு மீதி குறைத்து மற்றும் ஆண்டின் மூலதன செலவினம் கூட்டிக் காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய வேண்டும். |
| (உ) | 2019 மற்றும் 2020 இரண்டு ஆண்டுகளினுள் சபையின் சொத்துக்கள் மேம்படுத்தலிற்காக செலவிடப்பட்ட ரூபா 801,895 தொகை மூலதனமாக்கப்படாததனை மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்கள் ஊடாகவும் சரி செய்திருக்கவில்லை. | 2022 இறுதி கணக்கூடாக சரி செய்வதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகயளவில் கிடைத்திருந்த ரூபா 105,000 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்தமையால் நிலுவை வருமானம் ரூபா 105,000 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கைத்தவரொன்றாகும். ஏதிர்காலத்தில் இவ்வாறான கைத்தவறுகள் இடம்பெறாதவாறு கவனம் செலுத்துவதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய வேண்டும். |
| (எ) | 2021 வருடாந்த பாதீடுனூடாக அங்கத்தவர்களுக்கு ஏற்பாடு வழங்கியிருந்த போதும் பயன்படுத்தப்படாத ரூபா 990,000 தொகைக்காக கடன் கொடுனர் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததால் ஆண்டின் மூலதன செலவினம் மற்றும் கடன் கொடுனர் அப் பெறுமானத்தால் கூடுதலாக காட்டப்பட்டிந்தன. | அங்கத்தவர்களுக்கு ரூபா 30,000 வீதம் ஒதுக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான மாகாண சபையினால் அங்கீகாரம் 2021 திசெம்பர் 31 திகதி கிடைத்ததனால் கருத்திட்டத்தை மேற்கொள்ள முடியாதிருந்தது. அதனால் கடன்கொடுனராக பணம் ஒதுக்கப்பட்டது. அக் கருத்திட்டங்களை இந்த ஆண்டின் போது செயற்படுத்துவதாக. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்ய வேண்டும். |

**1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதி மற்றும் துணை பதிவேடுகளில் | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பதாக. | தவறுகளை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். |

மீதிகளிற்கிடையில் ரூபா 34,751,407 ஆன வித்தியாசம் காணப்பட்டது.

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(5) | 1992 முதல் 2013 வரை விநியோகிக்கப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 357,779 ஆன 30 மீண்டெழும் மற்றும் மூலதன முற்பணங்களை தீர்ப்பதற்கு போதியளவு தகவல்கள் இல்லாமையினால் அவற்றை பதிவழிப்பதற்கு ஆளுனர் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள உள்ளூராட்ச்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது. | ரூபா 357,779 ஆன தீர்க்கப்படாத முறபணம் தொடர்பாக பொது தீர்மானமொன்றை எடுப்பதற்கு சபரகமுவ உள்ளூராட்ச்சி ஆணையாளரிடம் அனுப்பப்பட்டுள்ளதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

**நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 10,653,255 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,102,591 ஆகும்.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

**சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் மாதாந்தம் 30 டொன் அளவான திண்மக் கழிவு பொருட்கள் திரண்ட போதும் அவைகளை முறையாக | பலங்கொட பிரதேச சபை அதிகார எல்லையினுள் உக்கலடையாத கழிவுப் பொருள் | முறையான கழிவு முகாமைத்துவ வேலைத் |

| | | |
|---|---|---|
| முகாமைத்துவப்படுத்த திண்மக் கழிவுப் பொருள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. உக்கலடையும் கழிவுகளை திரட்டுவதற்கு பொருத்தமான காணியொன்றை சுவீகரித்தில்லாததால் சேதன பசளை உற்பத்தி வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த முடியாமலிருந்தது. அவ்வாறே உக்கலடையாத கழிவு சுகாதார பாதுகாப்பு மற்றும் சூழல் நேயத்துடன் வெளியிடுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவத்திற்காக 2022 ஆண்டிற்கு தற்போது முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதுடன் உக்கலடையும் கழிவுப் பொருள் முகாமைத்துவதற்காக வெலிபதயாயவில் காணியொன்றை இனங்கண்டுள்ளதுடன் அக் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் உள்ளதாக. | திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். |